மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினரவர்கள் அமர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: என்னுடைய தொகுதியிலே மக்களை வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதைச் சொல்ல முடியா விட்டால் இங்கே நான் எதற்காக வர வேண்டும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினரவர்கள் இதைச் சரியாக எடுத்துக்கொள்ளாவிட்டால் 120 ஆவது விதியை நான் பயன்படுத்த வேண்டியிருக்கும்.

2. கவன ஈர்ப்பு.

சென்னை கண் மருத்துவமனையில் ஜெனரேட்டர் பழுதால் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகள்.

திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை நகரில் உள்ள எழும்பூர் அரசினர் கண் மருத்துவமனையில் பொருத்தப்பட்டுள்ள டீசல் ஜெனரேட்டர் செட் சமீபகாலமாக பழுதுற்றுள்ளதால் அம் மருத்துவமனையில் அவசர அறுவை சிகிச்சை போன்ற அத்தியாவசிய பணிகளை மேற்கொள்வதில் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகள் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

சென்னை, எழும்பூர் அரசினர் கண் மருத்துவ மனையில் இயங்கிவரும் இரண்டு ஜெனரேட்டர்களில் ஒன்று 28—8—1988 அன்று பழுதடைந்தது. இந்த ஜெனரேட்டரில் ஏற்பட்ட சில பழுதுகளை செப்பனிடும் பொருட்டு 29—8—88 அன்று பொதுப் பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. விரைவில் பழுது பார்த்துத் தருமாறு பொதுப்பணித்துறையினர் கேட்டுக்கொள்ளப் பட்டனர். மின்சார பராமரிப்பு உதவிப் பொறியாளர் செப்ப

1989 பிப்ரவரி 15]

விடும் பணி விரைவில் முடிக்கப்பெற்று, இந்த மாத (பிப்ரவரி) இறுதிக்குள் ஜெனரேட்டர் மீண்டும் நிறுவப்பட்டுவிடும் என்று உறுதி அளித்துள்ளார்.

3—2—1989 முதல் காலையில் 9 மணி முதல் 10 மணி வரையிலும், மாலையில் 7 மணி முதல் 7.30 மணி வரையிலும் மின் தடை ஏற்பட்டு வந்தது. இவ்வாறு மின்தடை ஏற்பட்டபோதிலும் அறுவை சிகிச்சை போன்ற அத்தியாவசிய பணிகள் எதுவும் தள்ளிப் போடப்படவில்லை. இந்த மின் தடை 16—2—1989 முதல் நீங்கி மின்சாரம் சீராகக் கிடைத்து வருவதால் நோயாளிகளுக்கு எவ்வித இடர்ப்பாடுகளும் இல்லாமல் தொடர்ந்து சிகிச்சைகள் அளிக்கப்படுகிறது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தொடர்பாக அருள் கூர்ந்து இதில் யாரும் குறுக்கிடுவதற்கு இடமில்லை. இது தொடர்பாக கவன ஈர்ப்பைத் தந்த உறுப்பினர் இரண்டு வினாக்களைத் தொடுக்கலாம்.

திரு. வே. தங்கபாண்டியன்: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் குறிப்பிட்ட வேலைக்கு வைக்கப்பட்டுள்ள டீசல் ஜெனரேட்டரை இயக்குவதற்கு நியமிக்கப்பட்டுள்ள ஆப்பரேட்டர் அந்தப் பணியிலே சரியாக ஈடுபடாத காரணத்தால் அவசர நேரங்களில், அத்தியாவசிய நேரங்களில் அறுவைச் சிகிச்சை நடைபெறாமல், அதனால் நோயாளிகளுக்குப் பெரும் இடர்ப்பாடு ஏற்படுகிறது. அதுகுறித்த சரியான தகவல் அரசுக்குத் தெரிவிக்கப்படாமல், தொடர்ந்து இந்த நிலை நீடிப்பதாக மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் வந்துள்ளன. அதுபற்றி அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினருடைய இந்தக் கவன ஈர்ப்புக்குப் பிறகு நானே அந்த மருத்துவமனைக்குச் சென்றிருந்தேன். அந்த இரண்டு ஜெனரேட்டர்களையும் பார்வையிட்டேன். அதிலே ஒன்று பொதுப் பணித் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது இன்னும் ஓரிரு நாட்களில் வந்துவிடும். பொதுப் பணித் துறைக்கு அது அனுப்பப்பட்டிருந்தாலும்கூட மற்ற ஜெனரேட்டரின் மூலமாக அங்கே பணிகள் சீராக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதனால் அறுவை சிகிச்சையில் எந்தவிதமான காலதாமதமும் ஏற்படவில்லை என்பதை மட்டும் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பார்வைக்குப் பின்னால் பழுதடைந்த அந்த டீசல் ஜெனரேட்டரை ரிப்பேர் செய்வதற்கும், தினசரி அதில் ஈடுபட்டிருக்கின்ற ஆப்பரேட்டரை பணியில் அமர்த்துவதற்கும் குறிப்பு வந்தாலும் கூட இருக்கின்ற ஜெனரேட்டரைப் பயன்படுத்த முடியாமல் ஆப்பரேட்டர் விடுப்பில் சென்றுவிட்டார்; அவருக்கு மாற்றாக யாரையும் போடாத காரணத்தால் ஜெனரேட்டர் இருந்தும் பயன் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. அதைத் தடுக்க அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு செய்தி வரவில்லை. அவ்வாறு செய்திகள் வருமாயின் அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) சட்டமன்ற எதிர்க்கட்சியின் பெயர் குறித்து.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எங்களுடைய கடமைகளைச் செய்வதற்கு இரண்டு விளக்கங்களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய அனுமதி கோரி நீங்கள் விளக்கம் கேட்க வேண்டுமே தவிர அனுமதி கோராமலே விளக்கம் கேட்கக்கூடாது. இப்போது உங்களுக்கு அனுமதி தரப்படுகிறது.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நேற்றையதினம் கூட இந்தச் சட்ட மன்றத்தில், ஒரு பத்திரிகையில் எண்ணிக்கை குறித்து குறிப்பிடப்பட்டது குறித்து பிரச்சினை வந்தது. ஆகவே இந்தச் சட்ட மன்றத்தில் எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய கட்சியின் பெயர் அ.இ.அ.தி.மு.க. (ஜெ) என்பதா அல்லது அதில் ஏதேனும் மாற்றம் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அதனுடைய மொத்த உறுப்பினர் எண்ணிக்கை என்ன என்பதைப் பற்றியும் தங்களுடைய விளக்கத்தை நான் கோருகிறேன்.